# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය, තැ.පෙ. 1559, කොළඹ 01.
பொதுத்திறைசேரி, நிதி திட்டமிடல் அமைச்சு, த.பெ.இல.1559, கொழும்பு 01.
General Treasury, Ministry of Finance & Planning, P.O.Box: 1559, Colombo 01.

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: 0094 112 484729, dgto@tod.treasury.gov.lk
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0094 112 484970
පොදු / பொது / General: 0094 112 484500, 0094 112 484600


මගේ අංකය / எனது இல / My No.: திசெதி/டீ/சீஎம்ஜ/2011
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 2011.12.01

**திறைசேரிச் செயற்பாடுகள் சுற்று நிருப இல.: 4/2011**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள் மற்றும்

மாவட்டச் செயலாளர்கள்.

**2012ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் படி செலவுகளுக்கான கட்டுநிதி எல்லைகளை நிர்ணயித்தல்**

2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் கட்டுநிதி எல்லைகள் அனுமதிக்கப்பட வேண்டியுள்ளதால் அதற்கான விண்ணப்பம் படிவ இல. ரீஓடி/ஐஎம்பி/02 மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று ரீஓடி/ஐஎம்பி/03 ஆகியவற்றை 31.12.2011 அன்று அல்லது அதற்கு முன்னர் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட ஆவணங்களைத் தயார் செய்யும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வருமான வகைகளை சரியாகக் கணிப்பிட்டு வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து கழித்துக் காண்பிக்க வேண்டும்.

2.1 மீண்டுவரும் செலவினங்களுக்கான (ஆளுக்குரிய வேதனாதிகள்) கட்டுநிதி எல்லைகளை நிர்ணயிக்குமிடத்து கீழ்வரும் செம்மையாக்கல்கள் கருத்தினில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

(i) விதவைகள் மற்றும் அனாதைகள் அறவீட்டுக்காக சம்பளம் மற்றும் கூலி என்பவற்றின் மொத்த நிதியேற்பாட்டின் 6.5%

(ii) அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குக்காக நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த செலவு எல்லைக்கு சமமான தொகை.

(iii) அரச ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட முற்பணங்களின் மீது வட்டி சாட்டுதல் செய்யப்படவேண்டும்.

2.2 ஏனைய முற்பணக் கணக்குகளின் கீழ் உட்படுத்தப்படும் தொகை பின்வருமாறு கணிப்பிடப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| ஏனைய முற்பணக் கணக்குகளின் கீழ் முழு வரவு எல்லை | XXX |
| கழி: குறுக்குப் பதிவு மூலம் கணிக்கப்பட்டுள்ள வரவுகள் | XXX |
| ஆகக் குறைந்த வரவு எல்லை | XXX |
| திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய கட்டுநிதி | XXX |


අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (මුදල් ප්‍රවාහ සහ ඒකාබද්ධ අරමුදල් කළමනාකරණය )
மேலதிக பணிப்பாளர் நாயகம் (காசுப்பாச்சலும் திரட்டு நிதி முகாமைத்துவமும்)
*Additional Director General (Cash Flows & Consolidated Funds Management)*
*Tel : 0094 112 484738*
*chandraw@tod.treasury.gov.lk*

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (ණය සේවා සහ ගිණුම්)
மேலதிக பணிப்பாளர் நாயகம் (கடன் சேவைகளும் கணக்குகளும்)
*Additional Director General (Debt. Servicing & Accounting)*
*Tel : 0094 112 484748*
*Fax : 0094 112 320042*
*guna@tod.treasury.gov.lk*

අධ්‍යක්ෂ(අරමුදල් කළමනාකරණය )
பணிப்பாளர் (நிதி முகாமைத்துவம்)
*Director ( Funds Management)*
*Tel: 0094 112 484994*

අධ්‍යක්ෂ (ණය සේවා සහ ගිණුම්)
பணிப்பாளர் (கடன் சேவைகளும் கணக்குகளும்)
*Director (Debt. Servicing & Accounting)*
*Tel: 0094 112 484750*
*ajitha@tod.treasury.gov.lk*

අධ්‍යක්ෂ (ආදායම්)
பணிப்பாளர் (வருமானம்)
*Director (Revenue)*
*Tel : 0094 112 484741*

3. முழுமையான கட்டுநிதி எல்லைகளை கணிப்பிடுவதற்காக கீழ்வரும் தகவல்களை இத்திணைக்களத்திற்கு சமா்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றது.

(i) வருமானங்களைக் குறிப்பிடும் போது அனுமதிக்கப்பட்ட வருமான மதிப்பீடொன்றிருப்பின் அதனையும் ஒவ்வொரு மாதத்திலும் வருமானமாக காசாக வசூலிப்பதற்கு எதிர்பார்க்கின்ற தொகையையும் படிவ இல. ரீஓடி/ஜஎம்பி/02 இன் 10ஆம் நிரலின் (2)ஆம் தொகுதியின் கீழ் குறிப்பிட வேண்டும்.

(ii) வேறேதேனும் அமைச்சு / திணைக்களத்திற்கு அல்லது மாவட்ட செயலகங்களுக்கு தங்களின் பேரில் செலவினை மேற்கொள்வதற்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதியேற்பாடு (அவ்வாறு ஒதுக்கப்படுகின்ற முழு ஏற்பாடு மற்றும் ஒதுக்கீடு வழங்கப்படுகின்ற நிறுவனங்கள் பற்றிய விபரம் ரீஓடி/ஜஎம்பி/04 இன் படி சமா்ப்பித்தல் வேண்டும்.)

(iii) மேலே 2.1இல் குறிப்பிட்டுள்ளவை தவிர்ந்த உரிய காலப்பகுதிக்காக குறுக்குப்பதிவு மூலம் கணக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேறேதும் செலவுகள் இருப்பின் அவை தொடர்பான விபரம்.

(iv) 2010 அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளில் மூன்றாம் நபர்களிடமிருந்து பெறப்பட்டு வைப்புக் கணக்கில் மீதியாகக் காணப்படும் மீதிகளுக்கு எதிராக செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கான மாதாந்த காசுத் தேவை பற்றிய விபரம்.

(v) திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை 3/2011 இன் 1.2ஆம் பந்தி மற்றும் அரச கணக்குகள் சுற்றறிக்கை 219/2011 இன் 5.1 பந்தியின் அறிவுறுத்தல்களுக்கமைய மீதி ஒதுக்கீடுகளை வைப்புக் கணக்கிற்கு மாற்றுதல் தொடர்பான விபரம்.

(vi) வேறேதேனும் அமைச்சு / திணைக்களம் அல்லது மாவட்ட செயலகங்களிலிருந்து பெற்றுக் கொண்ட ஒதுக்கீடுகளின் முழுப் பெறுமதி.

(vii) ஏதேனும் ஒரு அமைச்சு திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்கின்ற கட்டுநிதியைப் பயன்படுத்தி அவ்வமைச்சின் கீழுள்ள நியதிச் சபைகளுக்கு நிதி வழங்குவதாயின் அவ்வாறான அமைச்சுக்கள் அவை தொடர்பான விபரங்களைச் சமா்ப்பித்தல் வேண்டும்.

(viii) மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டைத் தயாரிக்க பயன்படுத்திய எடுகோள்களும் கணிப்பீடுகளும்.

4. மேலே (01) மற்றும் (03)ஆம் பந்திகளில் குறிப்படப்பட்டள்ள படிவங்களை திணைக்கள இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். (www.treasury.gov.lk) ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் அவசியமானவிடத்து தயவுசெய்து கீழ்வரும் உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொள்ளவும்.

**பகுதிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்**

| உத்தியோகத்தரின் பெயர் | பகுதி | தொலைபேசி |
|---|---|---|
| செல்வி. கே.எஸ். தயாரத்ன<br>உதவிப் பணிப்பாளர் | பாதுகாப்பு, மற்றும் சட்ட அமுலாக்கல் | 2484739 |
| திரு. எஸ்.ஏ.எஸ். விக்கிரமரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | கட்டமைப்பு அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு சுற்றாடல் | 2484743 |
| திருமதி. என்.பி.ஏ.ஆர். ஜெயவர்த்தன<br>உதவிப் பணிப்பாளர் | அரச சேவை | 2484744 |
| திருமதி. ஐ.ரி.கே. இலங்கமுதலி<br>உதவிப் பணிப்பாளர் | மனிதவள ஆராட்சி மற்றும் அபிவிருத்தி. | 2484740 |
| திரு. அஜந்த கல்ஹேன<br>பிரதிப் பணிப்பாளர் | உண்மைப் பொருளாதாரம் | 2484742 |

ஒப்பம்: எம்.எஸ்.டி. ரணசிறி
பணிப்பாளர் நாயகம்
திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்

பிரதிகள் : கணக்காய்வாளர் நாயகம்